


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.8.2025) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று அங்கு சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களின் உடல்நிலை குறித்து அவரது குடும்பத்தினருடன் கேட்டறிந்து, மருத்துவர்களிடம் அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி மற்றும் நல்லகண்ணு அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# உலகமயமாகிறார் பெரியார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக.30-**

**ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறக்கப்படவுள்ளது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



உலகமயமாகிறார் பெரியார்!

"ஆதிக்கம்தான் என் எதிரி" என முழங்கிச் சாதியாலும் பாலினத்தாலும் ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகச் சுற்றிச் சுழன்று பரப்புரை செய்த தந்தை பெரியார் அவர்கள் உலகம் முழுமைக்குமானவர்!

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டினையொட்டி உலகப்புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், செப்டம்பர் 4 அன்று நடைபெறும் கருத்தரங்கினில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் உருவப்படத்தினைத் திறந்து வைத்து, தென்னகமயக்கம் தீர்த்த சுயமரியாதை இயக்கம் குறித்த இரு நூல்களையும் பன்னாட்டு அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் வெளியிடுகிறேன்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; பெரியாரியம் உலகத்தவர் அனைவருக்கும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மேற்கு வங்கத்திலும் – தேர்தல் ஆணையம் வாக்காளர்களை நீக்க முயற்சி!

# “நான் உயிருடன் இருக்கும் வரை வாக்குரிமையைப் பறிக்க விடமாட்டேன்”!

## முதல்வர் மம்தா பானர்ஜி ஆவேசம்!

கொல்கத்தா, ஆக. 30 -

பீகாரில் மேலும் 3 லட்சம் வாக்காளர்களை நீக்கும் பணிகளை, தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது பீகார் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதேபோல், அடுத்தாண்டு தேர்தல் நடைபெறும் மேற்கு வங்க மாநிலத்திலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்துக்கு தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது.

பீகாரில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது 7 கோடியே 89 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர்.

அம்மாநிலத்திற்கு இந்தாண்டு இறுதியில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் இலட்சக்கணக்கான மக்களின் வாக்குரிமையை தேர்தல் ஆணையம் பறித்து பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியது.



இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், மேலும் 3 லட்சம் வாக்காளர்களை நீக்கும் பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

உரிய ஆவணங்கள் அளிக்கவில்லை என்று கூறி, 3 லட்சம் வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் வழங்கியுள்ளது. ஒரு வாரத்தில் ஆவணங்கள் அளிக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ளது. இதனால், வாக்காளர் பட்டியலில் இருந்து 3 லட்சம் பேர் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, அடுத்தாண்டு தேர்தல் நடைபெறும் மேற்கு வங்க மாநிலத்திலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்துக்கு தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. கொல்கத்தாவில் தேர்தல் ஆணையம் இன்று அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துகிறது. வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ள போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளருக்கும், அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் கடந்த 27 ஆம் தேதி தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக அனைத்துக் கட்சி கூட்டத்தை தேர்தல் ஆணையம் கூட்ட உள்ளது குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையே, மேற்கு வங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பேரணியில் பங்கேற்று பேசிய மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, நாடு முழுவதும் வங்காளிகள் மீது பா.ஜ.க. மொழி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்றார்.

வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்காளர்களின் பெயர்களை நீக்கும் நோக்கில், நாடு முழுவதும் இருந்து 500க்கும் மேற்பட்ட குழுக்களை மேற்கு வங்கத்திற்கு பா.ஜ.க. அனுப்பியுள்ளதாகவும், கணக்கெடுப்பு என்ற பெயரில் யாராவது வீட்டிற்கு வந்தால் அவர்களிடம் விவரங்களைத் தர வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளார். அந்தத் தரவைப் பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவார்கள் என்றும் தெரிவித்தார். “தான் உயிருடன் இருக்கும் வரை மக்களின் வாக்குரிமையை யாரும் பறிக்க விட மாட்டேன்” என்றும் முதலமைச்சர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

### பீகார் மாநிலம் – பாட்னாவில் – காங்கிரஸ் அலுவலகத்தில்

# பா.ஜ.க.வினர் கல் வீசித் தாக்குதல் - வாகனங்கள் சேதம்!

## போலீசார் வேடிக்கை பார்த்ததாக காங். குற்றச்சாட்டு!

பாட்னா, ஆக. 30 -

பாட்னாவில் காங்கிரஸ் அலுவலகத்திற்குள் புகுந்து பா.ஜ.க.வினர் கற்களை வீசி தாக்குதல் நடத்தி, அங்கிருந்த வாகனத்தையும் சேதப்படுத்தினர்.

வாக்காளர் அதிகார யாத்திரையில் பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசியதாக பீகார் பாட்னாவில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட்டு பா.ஜ.க.வினர் போராட்டம் நடத்தி பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்திற்குள் புகுந்த பா.ஜ.க.வினர் தாக்குதல் நடத்திய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வாக்காளர் அதிகார யாத்திரை நடத்தி வருகிறார். இந்த யாத்திரையின் போது, பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசியதாகக் கூறி, பாட்னாவில் பா.ஜ.க.வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற பா.ஜ.க.வினருக்கு, காங்கிரஸ் தொண்டர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போது, பா.ஜ.க.வினருக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

காங்கிரஸ் அலுவலகம் மீதும் அங்கிருந்த காங்கிரஸ் கட்சியினர் மீதும் கற்களை வீசி தாக்குதல் நடத்திய பா.ஜ.க.வினர், அலுவலகத்தின் கதவை உடைத்து, உள்ளே நுழைந்து, நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை சேதப்படுத்தியதால் அங்கு பதற்றம் நிலவியது.

இதையடுத்து, மோதலில் ஈடுபட்ட பா.ஜ.க.வினரையும், காங்கிரசாரையும் போலீசார் தடியடி நடத்தி கலைத்தனர்.

இதனால், அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டதால், பாதுகாப்புக்காக போலீசார் குவிக்கப்பட்டனர்.

இதனிடையே, காங்கிரஸ் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய பா.ஜ.க.வினரை தடுக்காமல், போலீசார் வேடிக்கை பார்த்ததாக காங்கிரஸ் கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.



விழுப்புரம் மாவட்டப் பொருளாளர், முன்னாள் நகர் மன்றத் தலைவர் விழுப்புரம் இரா.ஜனகராஜின் தந்தை இராஜாமாணி அவர்களின் மறைவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் சிவா எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமை தீர்மானக்குழு செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், வே.கணேசன், நகரப் பொருளாளர் என்.என்.இளங்கோ, செ.தினகரன், பா.ரீவினோத், கபாலி, சித்திக் அலி, கேபிள் சுரேஷ்பாபு, காளிதாஸ், இளையராஜா, பத்மநாபன், சிவக்குமார், பி.கே.சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

# இந்தியக் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு உடல்நிலை!

## குடும்பத்தினரிடம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

சென்னை, ஆக.30-

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் உடல்நிலை குறித்து அவரது குடும்பத்தினர் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களது உடல் நலன் குறித்து மருத்துவர்கள், அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர் முத்தரசன் உள்ளிட்ட தோழர்களிடமும் நேரில் கேட்டறிந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 8 ஆண்டுக்காலம் கட்சியின் தலைமை! தொடர்ந்து முதலமைச்சர்!

# திராவிட மாடல் ஆட்சியின் நாயகருக்குப் பெருமிதப் பாராட்டு!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

*சென்னை, ஆக.30-*

*கடந்த 8 ஆண்டு காலமாக கட்சியின் தலைமை, தொடர்ந்து ஆட்சித் தலைமையேற்று ‘திராவிட மாடல்’ நல்லாட்சியின் கோலோச்சும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி, வாழ்த்துக் கூறி திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*திராவிடர் இயக்கத்தின் கொள்கைப் பயணம் நீண்ட, நெடிய வரலாறு படைத்த ஒன்று. அதில் நீதிக்கட்சி 1920 முதல் 1937 வரை நேரடியாகவும், ஆதரவு தந்து, ஒத்துழைப்பு முறையிலும் 17 ஆண்டுகள் ஆட்சியில் அமர்ந்து, வரலாற்றை ஒளிரச் செய்தது.*

**அண்ணா முதலமைச்சர் பதவி ஏற்று, குறுகிய காலத்தில் முப்பெரும் சாதனைகள்!**

*கல்வி, மருத்துவம், சமூக நீதி, வகுப்புரிமை, சுயமரியாதையைச் சூடேற்றும் வர்ணாசிரம தர்மம் - தீண்டாமை ஒழிப்பு போன்றவை கொண்ட அந்த லட்சியப் பயணத்தை கடலூர் சுப்பராயலு (ரெட்டியார்) சில மாதங்கள் தொடங்கி நடத்தி, அதனைத் தொடர்ந்து பானகல் அரசர் தலைமை ஏற்று சாதனைகளைக் குவிக்கத்தார். 1938இல் காங்கிரஸ் - பார்ப்பன அரசு ஆச்சாரியாரின் தலைமை ஏற்பட்ட நிலையில், “ஜஸ்டிஸ் கட்சியை 500 அடி ஆழத்தில் குழி தோண்டிப் புதைத்து விட்டோம்” என்ற இறுமாறுப்பு - ஆணவப் பேச்சு ‘சத்திய மூர்த்திகள்’ மூலம் வெளி வந்ததற்குத் தக்க பதிலடி கொடுத்தார் அறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க. ஆட்சி பதவியேற்றதன் மூலம்! முதலமைச்சர் ஆகி, ஒரே ஆண்டில் முப்பெரும் சாதனை முத்துக்களைப் பதித்தார் தமது ஆட்சி மகுடத்தில்!*

*(1) சுயமரியாதைத் திருமணம் செல்லுபடி சட்டம்*

*2) ‘தமிழ்நாடு’ மாநிலம் பெயர் மாற்றம்*

*3) இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்தி அரை நூற்றாண்டு காலம் அசைக்க முடியாத பாறை போன்று வென்று, நின்று கொண்டுள்ளது.*

**மானமிகு சுயமரியாதைக்காரரான கலைஞர் தம் ஆட்சியின் மாட்சி!**

*1969இல் நம் அண்ணா மறைவிற்குப்பின், “மானமிகு சுயமரியாதைக்காரர்” என்று ஒரு வரியில் தனது முகவரி கூறிய நம் கலைஞர், தமது அரசியல் விற்பன்னக் கெட்டிக்கார வியூகத்தில் 5 முறை ஆட்சி செய்து - தமிழ்நாட்டின் பல துறைகளிலும், ஒப்பற்ற சாதனைகளை அடுக்கடுக்காகக் குவித்தார்.*

*ஜாதி தீண்டாமை ஒழிப்புக்கு ‘அனைத்து ஜாதியினரும், அர்ச்சகர் உரிமை’ என்ற தந்தை பெரியாரின் முக்கிய இலக்குக்கு செயல் வடிவம் தந்தார். எம்மொழி செம்மொழி கண்டார். (இந்து) ‘பெண்களுக்குச் சொத்துரிமை’ப் புரட்சிச் சட்டம் முகிழ்ப்பதற்கு மூல காரணமானார். மாநிலத்திலும் மத்தியிலும் சட்டம் இயற்றச் செய்து சரித்திரம் படைத்தார். மகளிர் உரிமை காத்த மாண்பாளராகி - தாய்க் கழகம் உச்சி மோந்து விருது வழங்கிய பாராட்டையும் பெற்றார்.*

**வெற்றிடம் அல்ல - கற்றிடமாக மாற்றிய நமது ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்**

*5 முறை ஆட்சிக்குப்பிறகு கலைஞரின் மறைவு தமிழ்நாட்டில் ‘வெற்றிடம்’ என்று சிலர் கொக்கரித்தனர்; அவர்களுக்குப் புரிய வைக்க, எட்டாண்டு காலமாக தி.மு.க.வின் தலைமை ஏற்று, கட்சி - இயக்கம் கட்டிக்காத்து, எமது தமிழ்நாடு ‘வெற்றிடம் அல்ல’ - பிறர் வந்து கற்றுச் செல்லும் ‘கற்றிடம்’ என்று புரிய வைக்கும் அமைதிப் புரட்சியை அன்றாடம் புதுப்புதுச் சாதனைகளை அனைத்துத் துறைகளிலும் செய்து வரும் ஒப்பற்ற ‘திராவிட மாடல்’ முதலமைச்சர்; அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் தடை ஏற்பட்டு விட்டதே என்று கலங்கி, ‘தந்தை பெரியாரை நெருங்கி முள்ளோடு புதைத்து விட்டோம்!’ என்று வருந்திய கலைஞரின் கவலை துடைத்து, ஆட்சிக்கு வந்த நூறாம் நாள் சாதனையாக ஆக.14, 2021இல் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கிய வரலாற்றுப் பெருமைக்கு உரியவரான நமது சமூக நீதிக்கான சரித்திர நாயகருக்குத் தாய்க் கழகத்தின் பெருமிதமும் பாராட்டும் கலந்த வாழ்த்துகள்!*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

**தொலைபேசியில் வாழ்த்து**

*எட்டு ஆண்டுகள் தலைமையேற்று - எளிதில் எவரும் எட்டாத உயரத்திற்கு உயர்ந்திருக்கின்ற நமது தி.மு.க. தலைவருக்கு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நேற்று (29.8.2025) காலை 11 மணியளவில், தொலைப்பேசி மூலம் திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வாழ்த்துக் கூறினார்.*

*அத்துடன், முதலமைச்சர் மேற்கொள்ளும் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகள் சுற்றுப்பயணத்தின்போது ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் அறிவாசான் தந்தை பெரியார் படத்திறப்பை நடத்தி வைத்திடுவதற்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைக் கூறினார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திராவிடர் கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.*



முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, நேற்று (29.08.2025) இராயபுரம் மண்டலம், வால்டாக்ஸ் சாலையில் உள்ள ஒத்தவாடை தெருவில் ரூபாய் 8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக்கூடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.